For Private Circulation Only

ECHOES INDIA

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

செப்டம்பர் 2014 மலர் 7, இதழ் 5

## மணப்பாக்க செய்திகள்

### ஜூலை 2014



**ஜூலை 4, வெள்ளிக் கிழமை: துவாரகா அபார்ட்மெண்ட்க்கு வருகை :** ஒரு வாரத்திற்கும் மேலாக உடல்நிலை சரியில்லாமல் சளிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த சகோ.கம்லேஷை காண்பதற்கு செல்ல மாஸ்டர் முடிவு செய்திருந்தார். ஆசிரமத்திற்கு பின்புறம் உள்ள அபார்ட்மெண்ட் காம்ப்ளெக்ஸிற்கு கால்ஃப் வண்டியில் சென்றார். செல்லும் வழியில் அப்யாசிகளின் வரவேற்புகள், கேள்விகள், பிரச்சனைகள் மற்றும் பலவற்றின் காரணத்தினால் நிறைய இடங்களில் மெதுவாக செல்ல வேண்டியிருந்தது.

மாஸ்டர் லிப்டிலிருந்து இறங்கியவுடன், சகோ.கம்லேஷ் அவரை வரவேற்றார். கம்லேஷ் வீட்டிலிருந்த புகைப்படங்களை, குறிப்பாக பாபூஜியின் புகைப்படங்களைப் பார்த்து மகிழ்ந்தார். கிருஷ்ணரைப் போல் ஒரு புத்தர் சிலை இருந்தது. மாஸ்டர் அதனை 'புத்த கிருஷ்ணா' என்று அழைத்தார். சிறிது நேரம் மாஸ்டர் வரவேற்பறையில் அமர்ந்திருக்க, சில அப்யாசிகள் அவரைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள். அதற்கு, "பூவைச் சுற்றி தேனீக்கள் இருப்பதுப் போல, அப்யாசிகள் எப்போதும் என்னைச் சுற்றி உள்ளனர்" என்று கூறினார். அதனைத் தொடர்ந்த கலந்துரையாடலில், ஐரோப்பிய பயணத்தில் நடந்தவற்றை நினைவு கூர்ந்தார். ஒரு சமயம், ஓரிடத்திற்கு, காரில் பயணம் செய்யவிருந்த போது, ஒரு அப்யாசி தனது பையை மறந்து வைத்துவிட்டு வந்திருந்தார். மேலும் இரு சம்பவங்கள் கிளம்புவதற்குத் தடையாக இருந்தன. பின் அந்த இடத்திலேயே பயணத்தை ரத்து செய்ய முடிவு செய்தார். ஆனால் முடிவில் அதன் விளைவாகப் பல நேர்மறையான நிகழ்ச்சிகளே ஏற்பட்டன. இவையனைத்தும் அவருடைய வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய உதாரணங்களாகும்.



சகோ.கம்லேஷ் வீட்டிலிருந்து மாஸ்டர், காம்ப்ளெக்சிலிருந்த அனைத்து அபார்ட்மெண்ட்க்கும் வருகை புரிந்தார். அனைத்திலும் அப்யாசிகள் தங்கி இருந்தனர். அடுத்தடுத்து செல்வதற்கு முன்பு, ஒவ்வொன்றிலும் சிறிது நேரம் இருந்த மாஸ்டர், ஒவ்வொரு முறையும் அன்பாக வரவேற்கப்பட்டார். பின் மாஸ்டர் அமைதியற்று, "வெகு நாட்களாக என்னுடைய இடத்திலேயே கட்டப்பட்டுவிட்டேன்" என்றார். இந்த பயணம் அவருக்கு வரவேற்கத்தக்க மாறுதலாக அமைந்தாலும்,, அவர் குடிலுக்கு திரும்பிய போது களைப்பாகவும், ஓய்வு எடுக்க வேண்டியதாகவும் இருந்தது. மாஸ்டர் பயணம் மேற்கொள்ளவும், வெளியில் செல்லவும் மிகுந்த விருப்பம் கொண்டுள்ளதைக் குறிப்பிட்டு, புகழ் வாய்ந்த பழமொழியான 'மனதின் பலம் ஆர்வத்துடன் உள்ளது, ஆனால் உடல் வலுவி ழந்துள்ளது' என்பது காட்டேஜில் அவ்வப்போது கூறப்படுகிறது.

**ஜூலை 6, ஞாயிற்றுக் கிழமை: பியானோ:** காலை உணவையும், செய்தித்தாளையும் படித்ததற்கு பின் காட்டேஜுக்கு வெளியில் மாஸ்டர் சிறிது நேரம் சூரிய வெளிச்சத்தில் வந்தமர்ந்தார். பியானோ வாசித்துக் கொண்டிருந்த சகோதரரை கவனிக்க விரும்பினார் மாஸ்டர். இந்த சகோதரர் நிறைய பாடல்களை வாசித்துக் கொண்டிருக்கையில்,



மாஸ்டர் வரவேற்பறையில் அமர்ந்து கவனமாக கேட்டுக் கொண்டும், மகிழ்ச்சியாகவும் இருந்தார். இதற்கு பின், ஒமேகா பள்ளியில் பயிலும் இளம் பெண்ணும் வாசித்தாள். நம் அப்யாசிகள் நன்கு வாசிப்பதை அறிந்து மாஸ்டர் மிகவும் மகிழ்ந்தார். "ஒரு பியானோ வாங்கவேண்டும் என்ற விருப்பம் எனக்கு எப்போதும் உண்டு. ஆனால் அது நடைபெறவில்லை அது ஒன்று இங்கு இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும்" என்றார் அவர். பலர் ஆர்வத்துடன் முன்வந்து பல ஆலோசனைகளைத் தெரிவித்தனர். சில நாட்களிலேயே ஒரு பியானோ வாங்கப்பட்டு குடிலில் நிறுவப்பட்டது. அந்த கருவியினை மாஸ்டர் பார்த்தபோது அவருடைய முகத்தில் மகிழ்ச்சி காணப்பட்டது. ஒரு அப்யாசி சில கீதங்களை இசைத்தார். மாஸ்டரும் சில இராகங்களை இசைத்தார். அதனை எங்கு வைக்கவேண்டும் எனவும் அதனை மூடி சரியாக பாதுகாக்கவேண்டியது பற்றியும் விவரித்தார். அப்யாசிகள் எப்போது வேண்டுமானாலும் வந்து அதனை இசைக்கலாம் என்றார். அடுத்த சில தினங்களிலேயே அப்யாசிகள் பலர் வந்து இசைத்தனர். மாஸ்டர் அவர்கள் இசைப்பதை கவனித்தார்.

**ஜுலை 12 சனிக்கிழமை:** குரு பூர்ணிமா: மாஸ்டர் பிரசாதத்தினை சமர்ப்பித்தவுடன் அதிக எண்ணிக்கையில் காத்திருந்த அப்யாசிகளை சந்திக்கத் தயாரானார். தொடக்கத்தில் வரிசையாக வந்த ஒவ்வொருவரையும் மாஸ்டர் ஆசிர்வதித்தார். மாஸ்டரின் பாதத்தினைத் தொடவேண்டாம் என பல முறை அறிவிப்புகள் செய்தும் அப்யாசிகள் அவருடைய பாதத்தினைத் தொட்டனர். மாஸ்டர் மிகவும் களைப்படைந்தார். தான் சத்சங்கம் நடத்தவேண்டும் என விரும்பினால் அவர்கள் வருவதை நிறுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். ஆனால் அப்யாசிகள் தள்ளிக்கொண்டு முன்னேறினர். அது முடிவடைந்தபோது, மாஸ்டர் 500 க்கும் அதிகமானவர்களைச் சந்தித்திருந்தார். பின்னர் தியானக்கூடத்திற்குச் சென்று, 55 நிமிடங்களுக்கும் மேலாக சத்சங்கம் நடத்தினார். மாஸ்டர் அவருடைய குடிலுக்குத் திரும்பியவுடன் தியானக்கூடத்தில் தொடர்ந்து பஜன் பாடப்பட்டது.

**ஜுலை 16 புதன் கிழமை:** மாஸ்டரின் உடல் நல குறைவு: வார ஆரம்பத்தில் இருந்தே மாஸ்டர் உடல் நலம் இல்லாமல் இருந்தார். அவருக்கு கடுமையான தொடர் இருமல் இருந்தது. தொற்று நோய் அதிகரித்து இருப்பதும் காணப்பட்டது. எனவே ஒருவர் குடிலின் உள்ளே வர கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இரண்டு தினங்களில் மாஸ்டரின் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. அவர் மீண்டும் மக்களிடம் உரையாட ஆரம்பித்தார்.

**ஜுலை 20 ஞாயிற்று கிழமை:** கமலேஷ் பாய் சத்சங்கம் நடத்தினார். பின்னர் மாஸ்டரின் உடல் நலம் குறித்த செய்தியினை அறிவித்தார். சென்னை ஆசிரமத்திற்கு வருவதைத் தவிர்த்து அப்யாசிகள் திருப்பூரில் நடைபெறும் விழாவில் கலந்து கொள்ளச் செல்லுமாறு சகஜ் சந்தேஷில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

**ஜுலை 22 செவ்வாய் கிழமை:** ஜோதிட சாஸ்திரத்தின்படி மாஸ்டரின் பிறந்த நாள்: இந்து நாட்காட்டியின்படி இன்று மாஸ்டரின் பிறந்த நாள். ஆனால் அவருக்கு மீண்டும் காய்ச்சல் ஏற்பட்டதால், அப்யாசிகளை சந்திக்கும் நிலையில் அவர் இல்லை. மேலும் படுக்கையை விட்டு எழக்கூட இயலவில்லை. கமலேஷ் பாய் காலை சத்சங்கம் நடத்தினார். பின்னர் ஏ.பி.துரை எழுதிய "என் கிறித்தவ குடும்பத்தினருக்கான கடிதங்கள்" (Letters to my Christian Family) என்ற புத்தகத்தினை வெளியிட்டார்.





# இந்திய மையங்களில் பூஜ்ய மாஸ்டரின் பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள்

திருப்பூரில் நடைபெற்ற மாஸ்டரின் 88 வது பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ள முடியாத அனைத்து இந்திய மையங்களிலுள்ள அப்யாசிகள் தத்தம் மையங்களிலேயே இவ்விழாவை கொண்டாடினர். சத்சங்கங்கள், பஜனைகள், குழந்தைகளின் சிறு நாடகங்கள் மற்றும் நிகழ்ச்சிகள், அப்யாசிகளின் உரைகள் முதலியன எல்லா மையங்களிலும் நடைந்தேறின.

வதோதரா, பில்வாரா, கொல்கத்தா, கரக்பூர், ஜோத்பூர், ஸ்ரீகங்காநகர், நவ்சாரி, வல்சாத், குல்பர்கா, மற்றும் ஆனந்த் மையங்களிலிருந்து வந்த செய்தி குறிப்புகள், அனைவரும் தெய்வீக அருளையும், ஆசியையும் உணர்ந்ததாக கூறின.


பில்வாரா


வல்சாத்



அலகாபாத்


ஷாரன்பூர்



காடம்பூர்


குல்பர்கா


லக்னௌ


கரக்பூர்

## இந்திய மையங்களில் பூஜ்ய மாஸ்டரின் பிறந்த நாள் விழா கொண்டாட்டங்களின்


ஜோத்பூர்


ஸ்ரீகங்காநகர்


ஸ்ரீநகர்

### குழந்தைகளின் பங்கேற்பு

குழந்தைகள் நம் குடும்பத்தின் ஒரு அங்கமாக இருப்பதால், அவர்கள் சகஜ மார்க்க குடும்பத்தில் வளரும் பொழுது, ஆசிரம நிகழ்ச்சிகளில் பங்கேற்க கற்றுக்கொள்கின்றனர். மாஸ்டரின் போதனைகளிலிருந்து அவர்கள், அவரின் மதிப்பையும், தரத்தையும், தங்கள் நுண்ணுணர்வால் ஈர்த்துக் கொள்கின்றனர். அவர்கள் தங்கள் நிகழ்ச்சிகளின் மூலம், அவர்களின் அன்பை பாட்டினாலும், நடனத்தினாலும் வெளிப்படுத்த கற்றுக் கொள்கின்றனர். நம் அனைவருள்ளும், அன்பையும், உவகையையும் கொணரும் வண்ணம் அவர்கள் அச்சூழ்நிலைக்கு உயிரூட்டுகின்றனர்


கொல்கத்தா


வல்சாத்



வதோதரா


குல்பர்கா


லக்னௌ

"யார் தன்னை தயார் படுத்திக்கொள்ள முனைகிறாரோ, அவருக்கு, வரையறாது வழங்க நான் எப்போதும் தயாராக இருக்கிறேன். ஆனால் இதுவரை, தன் பாத்திரம் நிரம்பி வழியும் வண்ணம் விருப்பம் கொண்டிருக்கும் ஒருவரையும் காண்கிலேன். நான், அடிக்கடி,'என்னிடம் இருப்பதையெல்லாம் சூறையாடிக்கொண்டு செல்லுங்கள், அதற்கு பதிலாக உங்களிடம் இருப்பதை கொடுங்கள்' என அப்யாசிகளிடம் கேட்கிறேன். நாணயமான பரிமாற்றம் திருடாக இருக்க முடியாது"

பாபூஜி மகராஜ்

ராம்சந்த்ராவின் முழுமையான படைப்புகள்- பாகம் 2 பக்கம் 13






## இணைச் செயளாளரின் ஹூப்ளி வருகை, கர்நாடகா

மிஷனின் இணைச்செயளாளரான ஏ.பி.துரை அவர்கள் ஆகஸ்ட் 8 லிருந்து 10 வரை ஹுப்ளிக்கு வருகை புரிந்தார்.

8ம் தேதி காலையன்று அவர், நகரிலிருந்து 12 கி.மீ. தூரத்திலுள்ள புதிய ஆசிரம நிலத்தை சென்று பார்வையிட்டார். மதியம் அவர் அத்திட்டப்பணியில் ஈடுபட்டிருந்த அப்யாசிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி அவர்களுக்கு, நிலத்தை விருத்தி செய்ய உதவும்படியான வழிகாட்டுகளை வழங்கினார். அவர் அப்யாசிகளை, எத்தனை சீக்கிரம் முடியுமோ தங்கள் நிலக்கூறுகளில் வீடுகளைக் கட்டுமாறு ஆலோசனை கூறினார். ஏனெனில் குடியிருப்புகளில்லாமல் அத்தனை தொலைவிலிருக்கும் இடத்தில் ஆசிரமம் அமைக்கும் கருத்து வியர்த்தமாகி விடும் என்றார். அப்யாசிகள் அடிக்கடி வருகை புரிய ஊக்குவிக்கும் பொருட்டு ஆசிரம நிலத்தில் தியானம் செய்ய ஒரு தற்காலிகமான கொட்டகை அமைப்பதாக முன்மொழியப்பட்டது.

மாலை அவர் சகோ.கீதா ரஷ்மியின் வீட்டில் நடைபெற்ற இல்லக் கூட்டத்தில் பங்கேற்று, குழுமியிருந்த ஆன்மீக ஆர்வலர்களுக்கு சகஜ மார்க்கத்தின் அடிப்படை விஷயங்களைப் பற்றி விளக்கினார்.

9ம் தேதியன்று அவர், கர்நாடகாவின் தார்வாட் பல்கலைகழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் பேசினார். அதில் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பட்டதாரிகள் பங்கேற்றனர். அவர் அவர்களுக்கு, சகஜ மார்க்கத் தத்துவத்தைப் பற்றி விளக்கியதுடன், எளிமை மற்றும், வாழ்க்கையில் சபலங்களின் தப்பான வழிகாட்டுதலை வெல்லுவதன் முக்கியத்துவத்தையும், தமது வாழ்க்கையின் அனுபவங்களின் உதாரணம் மூலமாக விளக்கினார். ஆன்மீகத்தின் மூலம் பெறும் உள் வலிமை மற்றும் ஒருவரின் சுய மரியாதை அதிகமாவதும் வலியுறுத்தப்பட்டன.

அதே நேரத்தில் ஹுப்ளியிலிருந்து 48கி.மீ. தொலைவிலுள்ள முண்ட்கோட் நகரிலுள்ள ஒரு அரசாங்கக் கல்லூரியில், Dr கஜேந்த்ர சிங் (மண்டலப் பொறுப்பாளர், வடக்கு கர்நாடகா மையம்) அவர்களால், ஒரு வரவேற்புக்கூட்டம் நடத்தப்பட்டது. 150க்கு மேற்பட்ட முதுநிலை மாணவர்களும், கல்லூரியின் ஆசிரியர்களும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். தமது உரையில் அவர், தியானத்தின் பங்கு, உண்மையான அன்பு, உண்மையான மகிழ்ச்சி மற்றும் உள் வழிகாட்டுதலின் அவசியம் ஆகியவற்றை வலியுறுத்தினார்.

மாலை சகோ.கீதா காமத்தின் மனையில் நடந்த முறைசாரா உரையாடலின் போது சகோ.துரை, அடிப்படியான சாதனையின் முறையான பயிற்சி மற்றும் அப்யாசிகளிடையே சகோதரத்துவத்தின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

ஞாயிற்றுக்கிழமை சத்சங்கத்திற்குப் பிறகு, சகோ. துரை தேர்ந்தெடுத்த சில தலைப்புகளில் அப்யாசிகளுக்குக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கீழே கொடுக்கப்பட்டவை சில தலைப்புகளாகும்:

- நமது தொழில் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை, பிறரை சகஜ மார்கத்தில் சேருமாறு ஈர்க்க வேண்டும்.
- புதிய ஆசிரமத்தை நாம் எவ்வாறு உபயோகப்படுத்த நிச்சயித்திருக்கிறோம்?
- ஆன்மீக வாழ்விற்கும் பௌதிக வாழ்விற்குமிடையே உள்ள பிரிவு செயற்கையானதாகும்.

மதிய உணவிற்குப் பிறகு அப்யாசிகளுடன் நடந்த கேள்வி பதில் நேரம், 4.30 மணிக்கு சத்சங்கத்துடன் முடிவடைந்தது. அன்றிரவு சகோ.துரை பெங்களூருக்குக் கிளம்பிச் சென்றார். எல்லா அப்யாசிகளும் அவரது வரவால் மிகவும் பயனடைந்ததாகத் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

## போபாலில் யூ-கனெக்ட்

யூ-கனெக்ட் என்பது நமது மிஷனால் கல்லூரி மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும். எம்.பி. மண்டலத்தில், இந்தோரிலும், போபாலிலும் தொடங்கிய இப்பணி, மெதுவாக வேறு மையங்களுக்கும் பரவிக் கொண்டிருக்கிறது.

இந்தோர் மையத்தில் எட்டு வாரங்களுக்கு சோதனை முறையாக இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு கல்லூரி இதனை செப்டம்பரிலிருந்து தொடங்க ஒப்புக் கொண்டுள்ளது.

இந்தோரிலிருந்து தேர்ச்சி பெற்ற தொண்டூழியர்களைக் கொண்ட ஒரு குழு, போபால் தொண்டூழியர்களுக்காக ஒரு புத்தறிவுப் பயிற்சியளிக்கும் நிகழ்ச்சியை, 13ம் ஜூலை அன்று ஏற்பாடு செய்திருந்தது. தங்களது அனுபவங்களையும் படிப்பினைகளையும் தொண்டூழியர்களுடன் பகிர்ந்து கொண்டனர்.

போபால் மையத் தொண்டூழியர்களுடன், அக்கம்பக்கத்து மையங்களான விதிஷா, மந்திதீப், ரெய்ஸன்,ஸேஹோர் மற்றும் நரஸிங்ககார்ஹ் ஆகிய மையங்களிலிருந்து 63 அப்யாசிகளும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

மண்டல ஒருங்கிணைப்பாளரான யாமினி கர்மர்கர், தமது குழுவினரான ராஜேஷ் ரவேர்கர், நிர்மல் டக்டீ, ரமாகாந்த் அகர்வால் (இந்தோரிலிருந்து) ஆகியோர்களுடன், பங்கேற்றவர்களுடன் உரையாடி, யூ-கனெக்டின் வெவ்வேறு தன்மைகளைப் பற்றி விளக்கினார்.

இக்குழுவினர், எல்லா மையங்களையும், நிறுவனங்களுக்கும் கல்லூரிகளுக்கும் செல்வதற்கு முன் தத்தம் மையங்களிலேயே முதலில் சோதனை முறையில் நிகழ்ச்சியை நடத்துமாறு ஊக்குவித்தனர். மாணவர்களுக்கான சுய வளர்ச்சியைப் பற்றிய பாடதிட்டத்தை கல்லூரிகள், பல்கலைகழகங்கள் மற்றும் நிறுவனங்களில் அறிமுகப்படுத்தப்போவதைப் பற்றி இரண்டு அமர்வுகளில் கலந்தாலோசிக்கப்பட்டது.

மையப் பொறுப்பாளர் பங்கஜ் மாதுர், அக்குழு இப்பணியை விரைவில் ஆரம்பிக்கும் என்கிற உத்தரவாதத்துடன் நிகழ்ச்சியை முடித்து வைத்தார்.

## இளைஞர்கள் நிகழ்ச்சி

### இளைஞர்களை ஊக்குவித்தல், இந்தோர்



'இதயம் பேசுகிறது' என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சியை இந்தோர் மையம் இளைஞர்களுக்காக ஏற்பாடு செய்திருந்தது. இதில், அருகிலுள்ள தேவாஸ் மையத்தின் பொறுப்பாளரும், பிரசெப்டரும், மற்றும் மருத்துவருமான சகோ.விகாஷ் ஷுர்கர் தன் வாழ்க்கையின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சி, கலந்துரையாடல் அதன்பின் வினா-விடை என்ற வரிசையில் தொகுக்கப்பட்டிருந்தது. சகோ.ராஜேஷ் ரவேர்கர், சகோ. விகாஷை நேர்காணல் கண்டு, அவரின் வாழ்க்கையின் பல்வேறு சூழ்நிலைகளை பற்றியும், மாஸ்டருடன் அவருடைய அனுபவங்களைப்பற்றியும், இளம் அப்யாசியாக இருந்தபோது சந்தித்த சவால்களைப்பற்றியும், அவர் அரசு அதிகாரியாக இருந்ததால் ஊழல் போன்ற நடைமுறை சிக்கல்களை எவ்விதம் சமாளித்தார் என்பன போன்ற கேள்விகளை அவரிடம் தொடுத்தார். சகோ. விகாஷ் தன் அனுபங்களையும், தன் உணர்வுகளையும் சகஜ மார்க்கம் எவ்விதம் தன் வாழ்க்கையில் உதவிக்கொண்டிருக்கிறது என்பதை பற்றியும் எடுத்துரைத்தார். மாஸ்டரின் அருளால், நாம் ஆன்மீகத்தில் வளரும் போது, நம்மிடம், எல்லாவற்றிலும், எல்லோருடனும் சகிப்புத்தன்மை வளர்கிறது என்ற ஒரு ஆச்சரியமான செய்தியையும் பகிர்ந்துகொண்டார். மேலும் நம்பிக்கை, மாஸ்டரின் பால் அன்பு, மற்றும் தொண்டு முதலியன பற்றியும் பேசினார்.

90நிமிட நேர்காணலுக்குப்பின், இளைய அப்யாசிகள், நடைமுறைக்குரிய மேலும் பல கேள்விகளை தொடுத்தனர். இளைய தலைமுறையினர், தினசரி எதிர்கொள்ளும் சவால்களை எவ்விதம் ஆன்மீக ரீதியாக எதிர் கொள்வது என்பது பற்றி மூத்த சகோதரர்களின் அனுபவங்களிலிருந்து கற்றுணர்வதே இந்நிகழ்ச்சியின் முக்கியக் குறிக்கோளாகும்.

சகோ.நிமேஷ் பலிவால் இந்நிகழ்ச்சியை நடத்தி வைத்தார். சகோ.அவினாஷ் நன்றி நவின்றார். 40 அப்யாசி களுக்கும் மேலாக இதில் கலந்துகொண்டனர். இம்மாதிரி நிகழ்ச்சிகளை மாத அளவில் நடத்த திட்டமிடப்பட்டது

### மணப்பாக்கம், தமிழ்நாடு

ஆகஸ்ட் 3ம் தேதியன்று, சில வெளிநாட்டு மற்றும் சென்னை அப்யாசிகள் சுமார் 50 பேருக்குக்காக ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

ஒவ்வொரு அப்யாசிக்கும் ஒரு நன்னெறி எழுதப்பட்ட அட்டை ஒன்று தரப்பட்டது. 25 செப்டம்பர் தேதியிட்ட விஸ்பர்ஸ் செய்தி வாசிப்புடன் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. முதற்கட்டமாக அப்யாசிகள் அனைவரும் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டபின், தங்கள் அட்டையில் உள்ள நன்னெறியை, நினைவு விளையாட்டிற்காக, அனைவரும் நினைவில் கொள்ளுமாறு உரக்கப்படித்தனர். சகஜ மார்க்கத்தில் சேர்ந்தபின், தங்களுக்கு ஏற்பட்ட பிரத்தியேக அனுபவங்களை யாவரும் பகிர்ந்து கொண்டனர். ஒவ்வொருவரும் பத்து நியமங்களையும் அச்சு அசலாக முடிந்தவரை கூறுமாறு வேண்டிக்கொள்ளப்பட்டனர்.

ஒவ்வொரு நியமத்திற்கும் பொருந்தும் பண்புகளை வெளிக்கொணர்வதுதான் இந்த 'நியமக்குடும்ப தேடல்' விளையாட்டின் முக்கிய நோக்கமாகும். ஒவ்வொருவரும் தன் அட்டையின் பொருள் எந்த நியமத்தை கொண்டிருக்கிறது எனவும், அதேபோன்ற அட்டை மற்றும் யாரிடம் இருக்கிறது என கண்டறிவது இவ்விளையாட்டின் அம்சமாகும்.

ஒவ்வொரு குழுவும் 'சொல் திறனின் வழிகள்' பற்றி விவாதித்தனர். சகஜ மார்க்கம் புது அங்கத்தினர்களை அறிமுகப்படுத்தும் போது, முக்கிய குறிப்புகளை புரிந்துகொள்வதின் அவசியத்தை இச்செயற்பாடு வலியுறுத்தியது. பங்கேற்றவர்கள் தங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்வதற்கும், உள்ளார்ந்த தேடலுக்கும் போதுமான நேரம் ஒதுக்கப்பட்டது.

'குறிக்கோள்' அடைய ஒருமனப்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வண்ணம் நடத்தப்பெற்ற 'குறி பார்த்து எய்தல்' விளையாட்டில் கலந்துகொண்டு அனைவரும் மகிழ்வெய்தினர். சிற்றுண்டி, தேநீருக்குப்பின்,

'சுய கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்வதற்கான ஐந்து குறிப்புகள்' மற்றும் ஹோவர்ட்மார்ட்டினின் ' இதயத்தின் புத்திசாலிதனத்தைப் பயன்படுத்திக் கொள்ளுதல்' என்ற பொருளின் மீதான உரை ஆகியவை ஒளி பரப்பப்பட்டன.

நிகழ்ச்சி முடியும் தருவாயில், அனைவரும் தங்கள் கருத்துக்களையும், ஆலோசனைகளையும், பின்னூட்டங்களையும் பதிவு செய்தனர்.



# நன்னெறிக் கல்வி

2000 ஆண்டு முதல், பத்தாண்டுகளுக்கும் மேலாக, மிஷனின் பல்வேறு மையங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி திட்டம் நம் அனைவருக்கும் நன்கு பரிச்சயமானதாகும். இந்த காலகட்டத்தில், நூற்றுக்கும் மேலான பள்ளிகள் இதில் கலந்துகொண்டன. மற்றும், நமது மிஷன் இந்தியா முழுவதிலும் 10,000-க்கும் மேலான ஆசிரியர்களை பயிற்றுவித்தது. மாஸ்டர் இத்திட்டத்தை மறுபார்வையிட்டு மேம்படுத்த விரும்பினார்.

இது சம்பந்தப்பட்ட குழுவானது, கிடைக்கப்பெற்ற அனுபவத்தைக் கொண்டு, அனைவரிடத்துமிருந்து பெறப்பட்ட பின்கருத்தை அதனுடன் ஒருங்கிணைத்து, சில மாற்றங்களைச் செய்துள்ளது. இத்திட்டம் இப்போது 'நன்னெறிக் கல்வி' என்று குறிப்பிடப்படுகிறது. இது 8 முதல் 12-ம் வகுப்பு வரை கற்பிக்கப்படுகிறது. ஒவ்வொரு வகுப்பிற்கும் ஆறு அடிப்படை நன்னெறிகளான நேர்மை, பணிவு, துணிச்சல், பொறுப்பு, அன்பு மற்றும் சுதந்திரம் ஆகியனவற்றைப் பற்றி 20 கூட்டத்தொடர்கள் நடத்தப்படும். தன்னார்வ அப்யாசிகளால் நடத்தப்படவிருக்கும் இந்த வகுப்புகள், வழக்கமான அட்டவணையின் அங்கமாக இருக்கும்.

வகுப்பை, ஆர்வம் மற்றும் ஈடுபாடு நிறைந்ததாக வைத்திருக்கும் பொருட்டு, மாணவர்களுக்கு எழுச்சியூட்டுவதாகவும், அவர்களது உணர்ச்சிகளை புரிந்துகொள்வதாகவும் இருக்க வேண்டிய அவசியம் கருதி, பாடத்திட்டம் கலந்துரையாடல் முறையில் இருக்கும். இதில், ஒளி-ஒலி படங்கள், கதைகள் மற்றும் பயிற்சிகளுடன் கூட சிந்தனையைத் தூண்டும் வியப்புரைகளும் இருக்கும்.

மே 2014-ல் துவங்கும் கல்வியாண்டில், 9 மையங்களிலுள்ள 15 பள்ளிகள் புதிய நன்னெறிக் கல்வி திட்டத்தை நடைமுறைப்படுத்த முன் வந்துள்ளன. இம்மையங்கள், ரேவா (2 பள்ளிகள்), வதோதரா (3 பள்ளிகள்), ஹைதராபாத் (2 பள்ளி கள்), திருச்சி (2 பள்ளிகள்), மும்பை (1 பள்ளி), சென்னை (1 பள்ளி), டெல்லி (2 பள்ளிகள்) மற்றும் சூரத் (1 பள்ளி)ஆகி யனவாகும்.

இந்த நன்னெறிக் கல்விக் குழு, உட்பொருள் மற்றும் பயிற்சிக்காக ரஞ்சனி பாலாஜி அவர்களையும், மையங்களுடனான ஒருங்கிணைப்புக்காக கந்தி பப்பு அவர்களையும், உட்பொருளின் தகவல் தொழில்நுட்ப நிர்வாகத்துக்காக ஜோதி செரடி அவர்களையும் கொண்டதாகும். மைய மட்டத்திலான ஒருங்கிணைப்பாளர்களும் தன்னார்வலர்களும் கூட உள்ளனர். எதிர்வரும் கல்வியாண்டில் இத்திட்டத்தை துவங்க சில மையங்களும் பள்ளிகளும் முன்கூட்டியே தேர்வு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தை துவங்க ஆர்வம் கொண்டுள்ள மையங்கள், கந்தி பப்பு அவர்களை vbe@shpt.in என்ற வலைமுகவரியில் தொடர்புகொள்ளவும்.

## மையங்களின் அனுபவங்கள்

**வதோதரா**: இது ஒரு முன்னோடித் திட்டம் என்பதால், ONGC-யிலுள்ள பரோடா மேல்நிலைப் பள்ளியில் 8ம் வகுப்பின் 4 பிரிவுகளுக்கும், அல்காபுரியிலுள்ள பரோடா மேல்நிலைப் பள்ளியில் 9-ம் வகுப்பின் 2 பிரிவுகளுக்கும், நன்னெறிக் கல்வி வகுப்புகள் துவங்கப்பட்டன. ஐந்து துணை உறுப்பினர்களுடன் சேர்ந்து, 10 தன்னார்வலர்களைக் கொண்ட ஒரு குழு, கற்பித்தலில் ஈடுபட்டிருக்கிறது. அவர்கள், வகுப்பில் நடத்தப்பட வேண்டிய பல்வேறு செயல்பாடுகளைப் பற்றி கலந்துரையாடும் பொருட்டு ஒவ்வொரு வாரமும் சந்திக்கி ன்றனர். கோத்ரியிலுள்ள தேஜஸ் வித்யாலயா பள்ளி, பாடத்திட்டத்தை ஏற்றுக்கொண்டது. அப்பள்ளியின் ஆசி ரியர்கள் கற்பிக்கும் பணியை மேற்கொண்டுள்ளனர். பள்ளி நிர்வாகத்தினரின் ஆதரவு உண்மையிலேயே குறி ப்பிடத்தக்கதாகும். மாணவர்களின் பதிலுணர்வு நேர்மறையாக இருப்பதோடு அவர்கள் வகுப்புகளில் மகி ழ்வுடன் இருக்கின்றனர்.

**மும்பை**: மஹாராஷ்டிரத்தில், பில்லபாங் பன்னாட்டு மேல்நிலைப் பள்ளியில் 8-ம் வகுப்பிற்கும், நகோத்தனேவி லுள்ள JH அம்பானி பள்ளியிலும் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இவ்விரு பள்ளிகளிலும் நமது தன்னார்வலர்களின் உதவியும் துணையும் கொண்டு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இவ்விரு பள்ளிகளின் ஆசிரியர்களும், மிகுந்த ஆதரவளிப்பதோடு, மாணவர்களின் பங்கேற்பையும், வகுப்பில் அவர்கள் தன்னார்வலர்களிடம் மனம் திறந்து பேசுவதையும் பாராட்டுகின்றனர். மாணவர்கள் ஆச்சரியப்பட வைக்கின்றனர், மற்றும் வெளிப்படையாகவும் இருக்கின்றனர். மேலும் அவர்களால், அங்கு நடத்தப்படும் செயல்பாடுகளுடன் தொடர்பு படுத்திக்கொள்ள முடிகிறது. முதல் நன்னெறியான நேர்மையை அவர்கள் மிக எளிதாகப் புரிந்து கொண்டனர். நாட்குறிப்பு எழுதுதல் என்ற கருத்து, ஒவ்வொரு வகுப்பிலும் கொடுக்கப்படும் மேற்கோள்கள் பற்றிய தங்களுடைய குறிப்புகள், எண்ணங்கள் மற்றும் பிரதிபலிப்புகளை பதிவுசெய்யும் ஒரு வழிமுறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. வகுப்பில் எப்போதும் மிக இலகுவான, சந்தோஷமான சூழல் நிலவுகிறது. JH அம்பானி மராத்தி மொழிவழிப் பள்ளியின் முதல்வர், தமது பள்ளியில் நன்னெறிக் கல்வியை மராத்தி அல்லது ஹிந்தியில் நடத்த நமது குழுவை அழைத்திருக்கிறார்.


அலகாபுரி


BHS, ONGC


மும்பை


நகோத்தனே

## மன்னவரப்பாடு, நெல்லூர் ஊரகம்



நெல்லூர் மையத்தைச் சேர்ந்த அப்யாசிகள் மன்னவரப்பாடு கிராமம் அருகில் 33 ஏக்கர் பரப்பிலான நிலத்தை வாங்கியுள்ளனர். அதில் 5.85 ஏக்கர், தியானக் கூடம் மற்றும் இதர வசதிகளை கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டு, மீதமுள்ள இடம், 300 வீட்டு மனைகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் சமையலறை மற்றும் உணவுக் கூடம் கட்ட அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி, (பூமி பூஜை) மன்னவரப்பாடு சுலோசனா சதனில், மாஸ்டரின் அன்பு கலந்த அனுமதி மற்றும் ஆசிகளுடன், ஆகஸ்ட் 6ம் தேதி அன்று, நெல்லூர் மையப்பொறுப்பாளர், சகோதரி. உமா கங்காதர் அவர்களால் நடத்தப்பட்டது. கட்டிட செலவு ரூ.20 இலட்சம், கழிப்பிட வசதிகளுக்கு ரூ.4 இலட்சமாகவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்குப்பின்னர் நடைபெற்ற சத்சங்கத்தில் நெல்லூர் மையம் மற்றும் கவாலி, புசி ரெட்டிபாலம், சித்திபுரம், குடுர், வேங்கடகிரி, நாயுடுபெட்டா, பொதலகூர் மையங்களைச் சேர்ந்த சுமார் 200 அப்யாசிகள் கலந்து கொண்டனர். அப்போது பேசிய சகோதரி, அப்யாசிகளை கட்டிடப்பணியில் தாங்களாக முன் வந்து தன்னார்வ தொண்டாற்றி இப்பணி அதிவிரைவில் முடித்திட உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

## மண்டலக்கூட்டம், ஹரியானா

சொனேபட் ஆசிரமத்தில் ஆகஸ்ட் 17ம் தேதி அன்று, ஒரு மண்டல அளவிலான கூட்டம் (21ம் மண்டலம்) நடைபெற்றது. மண்டலப் பொறுப்பாளர் தலைமையில் நடந்த இந்த கூட்டத்திற்கு, எல்லா பிரிபெக்டுகள், ஒருங்கிணைப்பாளர்கள், தொண்டர்கள், மற்றும் மையப் பொறுப்பாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் (agenda) சில முக்கியமான கருத்துக்களை விவாதிப்பதாக இருந்தது. மண்டலப் பொறுப்பாளர், சகோ. சத்ய மண்டல் ஆற்றிய விளக்கவுரை, மண்டல அளவிலான தகவல் பரிமாற்றம், மற்றும் மாஸ்டர் அல்லது சகோ.கம்லேஷ் அவர்களிடம் நேரடியான தொடர்பு பற்றிய வழிமுறைகளை விவரிப்பதாக இருந்ததுடன், மிஷன் வடிவமைத்துள்ள முறைகளை கடைபிடிக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தது. அவர் அனைவரையும் சகஜ மார்க்கத்தின் படை வீரர்களைப்போல் பணியாற்றுமாறு கேட்டுக்கொண்டார். அதன்பின் பிரி பெக்டுகள் இல்லாத மையங்களில், ஞாயிறு மற்றும் புதன் கிழமை சத்சங்கங்கள் எவ்வாறு நடத்துவது என்பது பற்றி விவாதிக்கப்பட்டது. மையப் பொறுப்பாளர்கள், மற்றும் ப்ரிபெக்ட் பொறுப்பாளர்கள், கடந்தாண்டின் முன்னேற்றம்,



சாதனைகள் மற்றும் வளர்ச்சி முயற்சிகள் பற்றிய வி வரங்களை கருத்து பரிமாற்றம் செய்தனர். பின்னர் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் தங்களின் மண்டலங்களில், பயிற்சி மற்றும் வளர்ச்சி( Training & Development), யூ-கனக்ட் (U-Connect), க்ரெஸ்ட், நன்னெறி கல்வி (Values Education), கட்டுரை எழுதுதல், கணிணி, அப்யாசி பதிவு முறை, தொண்டர் சேவைகள், எக்கோஸ், மிஷனின் வரலாற்றுத் திட்டம், அலுவலக கணக்குகள் ஆகியவற்றின் முன்னேற்றத்தைப் பற்றி தகவலளித்தனர்.

## உதய்பூர், இராஜஸ்தான்

சகோ.கம்லேஷ் திருப்பூர் பண்டாராவில் எடுத்துரைத்த தியானம் செய்ய வேண்டிய பாயிண்ட் A மற்றும் கீளினிங் செய்ய வேண்டிய பாயிண்ட் B பற்றி ஒரு விழிப்புணர்வு கருத்தரங்கம், உதய்பூரில், ஆகஸ்ட் மாதம் 3ம் தேதி நடைபெற்றது. மையப்பொறுப்பாளர், அங்கு குழுமியிருந்த 34 அப்யாசிகளுக்கு இந்த பாயின்ட்கள் இருக்கும் இடத்தைப் பற்றியும், தியானம் மற்றும் கீளினிங் செய்ய வேண்டிய முறைகளையும் விரிவாகப் பேசினார். இந்த சி றப்பு நுட்பங்களை அப்யாசிகள் நல்ல முறையில் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் ஆகும். முடிவில், அப்யாசிகளின் சந்தேகங்களைத் தீர்க்கும் வகையில் கேள்வி-பதில் நிகழ்ச்சி நடைபெற்றது.



## செய்தித் துணுக்குகள்


முத்தூர்

### முத்தூரில் முதல் புதன் கிழமை சத்சங்கம், தமிழ்நாடு

முத்தூர் தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒரு சிறிய நகரம். இது காங்கேயம் மையத்திலிருந்து 18 கி.மீ. தொலைவில் இருக்கிறது. இந்த தொலைவின் காரணமாக, முத்தூர் மையத்திலிருந்து வரும் ஆறு அப்யாசிகளால் தொடர்ச்சியாக தனித் தியானம் எடுத்துக்கொள்ள முடியவில்லை. அந்த மண்டலத்தின் பொறுப்பாளர் சகோ. விஸ்வநாதராவ் அவர்களின் ஆலோசனைப்படி, காங்கேயத்திலிருக்கும் பிரிபெக்ட்கள் முத்தூர் சென்று தனித்தியானம் கொடுக்க தொடங்கினர். அதன் விளைவாக அப்யாசிகளின் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்தது. மண்டல பொறுப்பாளர், அங்கு வாரத்தின் இடையே சத்சங்கம் நடத்த ஆலோசனை வழங்கினார். முதல் புதன் கிழமை சத்சங்கமானது ஜூன் 11 அன்று மண்டல பொறுப்பாளர் அவர்களால் வழங்கப்பட்டது, அதனுடன் இல்லக் கூட்டமும் இருந்தது. முத்தூர் அப்யாசிகள் 30 பேரும், காங்கேயத்திலிருந்து வந்திருந்த சில அப்யாசிகளும் அதில் கலந்துகொண்டனர். சத்சங்கத்திற்குப் பிறகு, 'சகஜ மார்க்கத்தின் மாஸ்டர்கள், மிஷன், பயிற்சிமுறை, லட்சியம் மற்றும் சகஜ மார்க்கத்தின் தேவை' ஆகிய தலைப்புகளில் உரை வழங்கப்பட்டது. ஐந்து பேர் சகஜ மார்க்கத்தில் இணைந்து பயிற்சி பெற தங்களுடைய விருப்பத்தை தெரிவித்தனர்.

### ஞாயிறு சத்சங்கம், மணிநகர், அகமதாபாத், குஜராத்

மாஸ்டரின் அனுமதியுடன், தற்பொழுது அகமதாபாத் மாநகர மத்தியில் ஞாயிறு சத்சங்கமானது, காகலியா ஏரி அருகில் மணிநகரில் நடைபெற்று வருகிறது. இது மணிநகரில் வசிக்கும் அனைத்து அப்யாசிகளுக்கும் மையப்பகுதியாகவும், எளிதாக செல்லக்கூடிய பகுதியாகவும் இருக்கின்றது. முதல் சத்சங்கமானது ஆகஸ்ட் 3 அன்று நடைபெற்றது. 60-க்கும் மேற்பட்ட அப்யாசிகள் அதில் கலந்துகொண்டனர். 20 சதவீத அப்யாசிகளுக்கு சத்சங்கத்தில் கலந்துகொள்ள வாய்ப்பே இல்லாமல் இருந்தது. இது நிச்சயமாக ஞாயிற்றுக்கிழமை சத்சங்கத்திற்கு ஆசிரமம் வர இயலாத அப்யாசிகளுக்கு, பயன்பெறத்தக்க வகையில் இருக்கின்றது.

### விளையாட்டு தினம், அகமதாபாத், குஜராத்

ஆகஸ்ட் 15 அன்று, அகமதாபாத் அடலாஜ் ஆசிரமத்தில் விளையாட்டு தினம் சுதந்திர தினத்துடன் கொண்டாடப்பட்டது. அனைத்து அப்யாசிகளும் அழைக்கப்பட்டு, அனைவரும் பங்கெடுத்துக் கொண்டனர். இந்த நிகழ்ச்சியானது காலை 7.30 சத்சங்கத்துடன் துவங்கியது. காலை உணவிற்குப் பிறகு, 9.30 மணிக்கு கொடி ஏற்றப்பட்டது. விளையாட்டு நிகழ்வுகள் 10 மணியிலிருந்து 1மணி வரை நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து மதிய உணவு இருந்தது. இசை நாற்காலி, டேபிள் டென்னிஸ், கேரம், கயிறாட்டம், ஒரு நிமிட விளையாட்டு, இலக்கை காண்பித்தல், சாக்கு ஓட்டம் மற்றும் ஜோடி ஓட்டம் ஆகிய விளையாட்டுகள் நடத்தப்பட்டன. அனைத்து பங்கேற்பாளர்களும் அவற்றில் முழுமையாக ஈடுபட்டு மகிழ்ந்தனர்.



வாரணாசி


அகமதாபாத்

### அகில இந்திய கட்டுரை எழுதும் நிகழ்வு 2014, வாரணாசி, உ.பி

இந்த மண்டல (12Di) அளவிலான பயிற்சி முகாமானது, ஜூலை 5ம் தேதி நடத்தப்பட்டது. அது தன்னார்வ தொண்டர்களுக்கு உதவி செய்யும் வகையிலும், வழிமுறைகளை கொண்டதாகவும், பின்பற்ற வேண்டிய விதிமுறைகளும் வழங்கப்பட்டது. 60க்கும் மேற்பட்ட தன்னார்வ தொண்டர்கள், துணை மையங்கள் உட்பட 23 மையங்களிலிருந்து, அந்த பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர். முடிவில் அனைவருக்கும் நிகழ்வுக்குத் தேவையான பொருட்கள் வழங்கப்பட்டது.

### லால்பானியா, ஜார்கண்ட்

ஜூலை 6 ம் தேதி பயிற்சி முறையில் நிலைநிறுத்துதலில் 'தியானம்' நிகழ்ச்சியானது மிகவும் பயனளிக்கத்தக்க வகையில், அனைவரும் ஈடுபாட்டுடன் கலந்து கொண்டு, கற்றுக்கொள்கின்ற வகையில் இருந்தது. அந்த நிகழ்ச்சி மாஸ்டரின் அன்பளிப்பு என்பதை அனைவரும் உணர்ந்து கொண்டனர். அனைத்து அப்யாசிகளின் மத்தியிலும் சகோதரத்துவமும் வளர்ச்சியடைந்தது.


லால்பானியா

# செய்தியைப் பரப்புதல்

## சோழவந்தான், தமிழ் நாடு



ஜூலை 30, 2014 அன்று, சோழவந்தான் மையத்தில், ஒரு வரவேற்புக் கூட்டம் நடந்தது. இந்நிகழ்ச்சிக்கு மண்டல பொறுப்பாளர் (தமிழ்நாடு-TN-2D)சகோ. ராமநாதன் மற்றும் இரண்டு பிரிபெக்டுகள் தலைமை தாங்கினர். இந்நிகழ்ச்சியில் அப்யாசிகள் மற்றும் புதியவர்கள் என 50 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி சாதனா மற்றும் பழங்காலத்தில் அதன் தோற்றம் பற்றிய முறையான அறிமுகத்துடன் தொடங்கியது. மக்கள் மிகவும் உற்சாக மனோபாவத்துடன் பங்கேற்றனர். மேலும் சகஜ மார்க்கத்தின் சிறப்பம்சங்களைப் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினர்.

## அரசு கருவூலக அலுவலகத்தில் கருத்தரங்கம், அகமதாபாத், குஜராத்



நமது மிஷனைப் பற்றி அரசு கருவூலக அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு ஒரு சிறப்பான நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சகோதரர் ஜிக்னேஷ் அவர்களுக்கு பேச்சாளராக 30 நிமிட வாய்ப்பு அளிக்கப்பட்டது. துறைத்தலைவரிடம் முறையான அனுமதி மற்றும் அலுவலர்களிடம் நேரத்திற்கேற்ப ஏற்பாடுகள் செய்து கொண்ட பிறகு அவர் நமது பயிற்சி முறையின் ஆக்கப்பூர்வமான செயல்முறையினைப் பற்றிய விரிவான தகவலை அளித்தார். பெரும்பாலான ஆர்வலர்கள் மிஷனில் இணைவதற்கான விருப்பத்தையும் இது போன்ற நிகழ்ச்சிகள் மீண்டும் நடத்துவதற்கான விருப்பத்தையும் தெரிவித்தனர்.

## மங்களூர், கர்நாடகம்



ஆகஸ்ட் 11, 2014 திங்கள் அன்று மங்களூரில் உள்ள பெசன்ட் முதல் தர மாலை நேர கல்லூரியில் 90 மாணவர்கள் மற்றும் 5 பேராசிரியர்களுக்காக ஓர் அறிமுக நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஆன்மீகத்தின் முக்கியத்துவம் மற்றும் குறிப்பிடத்தகுந்த சிறப்பம்சங்கள் பற்றி விரிவாக கேட்போருக்கு விளக்கப்பட்டது. 11 மாணவர்கள் மற்றும் ஒரு பேராசிரியர் மிஷனில் இணைவதற்கான விருப்பத்தை தெரிவித்தனர். ஆர்வலர்களுக்கு தனித்தியானங்கள் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் கல்லூரி வளாகத்திலேயே செய்யப்பட்டிருந்தது.

## தெலிங்கானா, கும்மரிகுண்டாவில் புதிய மையம்



கரிம் நகர் மாவட்டத்திற்கு தொலைதூரப்பகுதியில் கும்மரிகுண்டாவில் புதிய மையம் ஒன்று அமைந்துள்ளது. 1992ம் வருடத்திலிருந்து 4 அப்யாசிகள் சத்சங்கங்களில் கலந்து கொள்வதற்கும் தனித்தியானங்கள் எடுத்துக் கொள்வதற்கும் அருகிலுள்ள மையமான பெத்தப்பள்ளிக்கு பயணம் செய்து வந்தனர். மார்ச் மாதத்தில் மண்டல பொறுப்பாளர் (மண்டலம்-1A) மது கோட்டப்பள்ளி, பெத்தப்பள்ளி மையத்தைப் பார்வையிடும் போது கும்மரிகுண்டா அப்யாசிகளை சந்தித்து, அந்தப்பகுதியில் புதிய மையத்தின் தேவையை புரிந்து கொண்டார். ஆகையால் ஞாயிற்றுக்கிழமை சத்சங்கம் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டது. தற்போது ஆகஸ்ட் 9ம் தேதி மண்டலப்பொறுப்பாளரும் அவர் குழுவும், மீண்டும் மையத்தை பார்வையிட்ட போது மிகவும் உற்சாகம் ஊட்டும் விதமாக 5 மாதங்களுக்குள்ளாகவே இந்த கிராமத்தில் அப்யாசிகளின் எண்ணிக்கை 25 ஆக வளர்ந்திருந்தது. மேலும் அந்த குழு அந்த மையத்தின் ஆன்மீக சூழ்நிலையைப்பற்றி கூறும்போது அது ஆன்மீகரீதியாக ஈர்த்துக் கொண்டும் சூட்சுமமாகவும் இருக்கிறது என்று கூறியது.

## ஹூப்ளி ஆசிரமம், கர்நாடகா

# ஒளி மையம்










ஹூப்ளி நகரமானது, சாலை வசதி, தொடர்வண்டி மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து வசதி முதலியவற்றுடன் நன்கு இணைக்கப்பட்டுள்ள, வேகமாக வளர்ந்து வரக்கூடிய நகரங்களில் ஒன்று. இதன் இரட்டை நகரமான தார்வாட், ஹூப்ளியிலிருந்து 20கி.மீ. தொலைவில், மாவட்டத் தலைமையகமாக விளங்குகின்றது.

ஹூப்ளி மையமானது 1997 ல் இரண்டு அப்யாசிகளுடன், அப்பொழுது மிஷனின் பொதுச் செயலாளராக இருந்த சார்நாத்ஜி அவர்களுடைய முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. சத்சங்கம் வழக்கமாக, சகோ.பவாஸ்கர் அவர்களுடைய வீட்டிலும், பிறகு மஹிலா வித்யாபீத் மற்றும் பேங்கர்ஸ் கிளப்பிலும் நடத்தப்பட்டது. இன்று மையத்திற்குச் சொந்தமாக ஆசிரமம் இருக்கின்றது. சுமார் 50 அப்யாசிகள் அச்சமயத்தில் இருந்தனர்.

2002 ஏப்ரல் மாதம் 5ம் தேதி ஆசிரம நிலத்தை பதிவு செய்வதற்காக ஹூப்ளிக்கு மாஸ்டர் ரயில் மூலம் வருகை புரிந்தார். அந்தப் பகுதியில் தெய்வீக ஒளியைப் பரப்ப, மையத்திற்கான சொந்த ஆசிரமம் பெற, அவர் ஆசீர்வதித்தார். அந்த தருணத்தில் அவர், "ஒவ்வொரு முறையும் ஒரு சிறு நிலப்பகுதியை, நமது நமது பெருமதிப்பிற்குரிய மாஸ்டர் பாபூஜி மகராஜ் அவர்களுக்கு அர்ப்பணிப்பு செய்யும் போதும், ஒரு உள்ளார்ந்த மகிழ்வு ஏற்படுகின்றது. இது குடும்பத்தில் ஒரு குழந்தையைப் பெற்றிருப்பது போன்றது. பிரார்த்தனை மூலமாக அவரை அழைப்பதற்கும், அவரது அருகாமைக்குமான தெய்வீக இருப்பிடமாக ஒவ்வொரு ஆசிரமமும் உள்ளது. அவரது ஒளியை நித்தியத்திற்கும் இருக்கின்ற வகையில், நித்தியத்திற்கும் கிடைக்கின்ற வகையில் அவ்விடத்தை நாம் பராமரிக்க வேண்டும்" என்று கூறினார்.

ஆசிரமமானது, உள்நாட்டு விமான நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 2.5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. 11 சென்ட் ஆசிரம நிலத்தில், தியானக் கூடமானது சுமார் 1400 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. தியானக் கூடமானது சுமார் 150அப்யாசிகள் அமரக்கூடிய அளவிற்கு இடவசதி கொண்டுள்ளது. இதைத் தவிர ஒரு சமையல்கூடம், சாப்பிடும் கூடம், அலுவலக அறை, கழிவறை மற்றும் குளியலறை ஆகியனவும் அமைக்கப்பட்டுள்ளன. ஆசிரமத்தில் பல மரங்களைக் கொண்ட அழகான தோட்டமும், குழந்தைகள் விளையாடுவதற்கான இடமும் உள்ளது.

மாதத்தின் ஒவ்வொரு இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையும். முழுநாள் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட அப்யாசிகள் ஞாயிறு சத்சங்கத்தில் கலந்து கொள்கின்றனர். மேலும், கர்நாடகா மாநிலத்திற்கான சில பயிற்சி முகாம்களும் மையத்தில் நடந்து வருகின்றது. ஆசிரியர்களுக்கான நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி பயிற்சி முகாம்கள், திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் மற்றும் பதிப்பக வெளியீடுகளுக்கான பயிற்சி முகாம் ஆகியன இவற்றுள் அடங்கும். தொடர்ச்சியான அப்யாசிகள் பயிற்சி முகாம்கள், கட்டுரை எழுதும் போட்டி, மிஷனின் வெளியீடுகள் மற்றும் துணை மையங்களுக்கு அடையாள அட்டைகளைப் பெற்று வழங்குதல் ஆகியவை இவ்வாசிரமத்தின் இதர பணிகளாகும்.

நவநகர், நாவல்கண்ட் மற்றும் கைகா ஆகிய மூன்று மையங்கள் இதுவரை இவ்வாசிரமத்தின் காலகட்டத்தில் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றன. இல்லக் கூட்டங்கள், அறிமுகக் கூட்டங்கள் மற்றும் அப்யாசிகளுக்கான பயிற்சி முகாம்கள் ஆகியவை அருகாமையில் இருக்கக்கூடிய பகுதிகளில் முறையாக தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, ஆசிரமத்திற்காக 5 ஏக்கர்களும், அப்யாசிகள் குடியிருப்பிற்காக 9 ஏக்கர்களும் ஆக மொத்தம் 14 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. புதிய ஆசிரம நிலமானது தற்போது உள்ள ஆசிரமத்திலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது. மிஷனின் இணைச் செயலாளர் சகோ.எ.பி.துரை தனது தற்போதைய வருகையின் பொழுது, அப்யாசிகள் மற்றும் செயல் அலுவலர்களுடன் கலந்துரையாடினார். அதில், ஆசிரமத்தின் உள்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கும், ஆசிரமத்தை அடுத்துள்ள பகுதிகளில் ஒரு அப்யாசிகள் நிறைந்த சமுதாயத்தினை உருவாக்கவும் கூடிய விரைவில் ஆவன செய்வதாகவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டது.



To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2014 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.